மைல்கள் சென்னைக்கு வரவேண்டிய நிலைமை நம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது. நாங்கள் இது தவிர்க்கப்பட வேண்டும் என்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிகளும் இது பற்றி உற்சாகத்தோடு பேசினால், நிச்சயம் அதுவரும் ஆனால் அப்படி அவர்கள் பேசியதாக நான் கேள்விப்படவில்லை.

Temporary Courts for Tindivanam

* 246 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether temporary Civil Courts are being set up in Tindivanam from November, December 1969; and

(b) the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) திண்டிவனத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் முடிவுபெறாத வழக்குகள் அதிகமாக இருந்ததனுல் கூடுதலாக தற்காலிக மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. கூடுதலான இம்மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 1969, டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து செயலாற்றத் தொடங்கியது.

காஞ்சீபுரம், வட ஆர்க்காடு, சாரம் கூட்டுறவு நூற்பாலைகள்

*247 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள (1) காஞ்சீபுரம், (2) வட ஆர்க்காடு, (3) சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் ஏற்பட்ட நஷ்டம், கணக்கில் ஏற்பட்ட நஷ்டமாகும். இந்த ஆலையின் நெருக்கடி நிதி, அதன் நஷ்டத்தை விட அதிகமாகும். இந்த ஆலைகளில் நஷ்டத்தைத் தவிர்க்க, உற்பத்தியைப் பெருக்கவும், பஞ்சு கொள்முதலில் கவனத்தை அனுசரிக்கவும், தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான ஒத்துழைப்பைப் பெறவும், முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. விஞயகம்: சார், வட ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் கணக்கில் ஏற்பட்டது என்று சொன்னர்களே, ஸ்பின்னிங் மில்லை இது பாதிக்காதா? Is it accounting deficiency? தென் ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் இருக்கிறது. நாம் நடத்தும் தொழில்களில் நஷ்டம் கணக்குப் பார்த்த பிறகு தெரிகிறது. தனியார்களிடம் விடுவதனுல், இப்படி நஷ்டம் ஏற்படாது, அதற்கு அவர்களுடைய திறமைதான் காரணம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியாருக்காக வாதாடுவது வேடிக்கையாக இருக்கிறது. நம் துறை நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று சொன்னால், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தனியார் துறையில் நஷ்டம் ஏற்பட வில்லையா? ஸ்டாண்டர்ட் மோட்டார் மூடிக்கிடக்கிறது. இன்னும் எத்தனையோ நிறுவனங்கள் தனியார் துறையிலும் நஷ்டத்தில் இருக்கின்றன. 27 நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. தனியார் துறையில் நஷ்டமே இல்லை என்பதும் சரியில்லை. நம் துறையில், கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் அதில் ஈடுபட்டிருக்கிற பொது மக்கள் பிரதிநிதிகள் தனி ஆர்வம் காட்ட வேண்டும். அரசு அலுவலர்களையே நம்பும் சூழ்நிலைதான் இருக் கிறது. அதை மாற்ற வேண்டும். அப்பொழுது நல்ல முறையில் நடக்கும். இந்த இரண்டு ஆலைகளைப் பொறுத்தவரையில், காஞ்சீ புரத்தில் 31—3—1970 கணக்குப்படி,

Accumulated net loss	28.18 லட்சம்.
Accumulated reserves	26.38 லட்சம்.

ஆகவேதான் மார்ஜினலாக 1.8 லட்சம் நஷ்டம் என்று சொன்னேன். சாரம் கூட்டுறவு ஆலையில்

Accumulated net loss	30.07 லட்சம்.
Net reserves	28.72 லட்சம்.
Net loss	1.35 லட்சம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், கூட்டுறவுத் துறையில் நாம் நடத்தும் தொழிற்சாலைகள் நஷ்டத்தில் ஓடுவதாகத்தான் கணக்கு வருகிறது. காரணம் கூட்டுறவுத் துறையில் நிர்வாகத்தில் சிக்கலும், சட்டங்களில் சிக்கலும் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே. அது உண்மையா? அதை மாற்றியமைத்து, நஷ்டம் இல்லாமல், தனிப்பட்டவர்கள் தொழில்களைப் போல், அவர்கள் சுதந்தரமாக இயங்கும் வாய்ப்பையும் வசதியையும் அமைத்துக் கொடுப்பார்களா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாம் நஷ்டம் என்று சொல்லியதாகத் தெரியவில்லை. கணக்குப்படி, 31—3—1970-ம் தேதி முடிய, தென்னார்க்காட்டில் பிராபிட் எர்ன்ட் ரூ. 12 லட்சம். ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் ஜில்லாவில் 4 லட்சம் நஷ்டம். திருச்செந்தூரில் லாபம் 3.17 லட்சம். சேலம் கூட்டுறவு ஆலையில் 3.62 லட்சம் லாபம். மதுரையில் 3.68 லட்சம் லாபம். கோயம்புத்தூரில் 75,000, திருச்சியில் 3.77 லட்சம், இவையெல்லாம் லாபம். கன்னியாகுமரியில் 1.8 லட்சம் நஷ்டம். வடார்க்காட்டில் 7.27 லட்சம் லாபம். தஞ்சாவூரில் 2.16 லட்சம் லாபம். ஆக லாபமும், நஷ்டமும் இருக்கிறது. நான் சொன்னதைப் போல், கூட்டுறவு நிர்வாகம் அடிப்படையிலிருந்து மக்களிடையில் கூட்டு மனப்பான்மை வளர்க்கப்படவில்லை. அரசு அலுவலர்கள் நடத்தும் நிலைதான் இருக்கிறது. கூட்டு முயற்சியில் மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டால், வெற்றிகரமாக நடத்த முடியும். நல்ல தலைவர்கள் இருக்கும் இடங்களில் கூட்டுறவு நிறுவனம் சிறந்த முறையில் நடப்பதைப் பார்க்கிறோம்.